**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

| | |
|---|---|
| **Calender Case** | **CC. 146/2016** |
| **Miscellaneous** | |
| **Preliminary Register** | |
| **Sessions** | |
| **Deposition of witnesses for** | PW - 1 |

| | | |
|---|---|---|
| **Name** | : | முரளிதரன் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1873 of the day of 06-12-2022**

**முதல் விசாரணை**

நான் திருமங்கலம் ஜியோ நகரில் குடியிருந்து வருகிறேன். நான் செண்பக டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருகிறேன். கடந்த 2010 வது வருடத்தில் எங்களது வீட்டில் வீட்டு வேலை செய்வதற்காக செல்வி என்பவரை வேலைக்கு வைத்தோம். அவர் ஒரே ஒரு நாள் மட்டும் வேலை செய்தார். மறுநாள் வரவில்லை. நான் எனது வீட்டில் இருந்த பீரோவை சரிசெய்த போது நகை சிதறிக் கிடந்தது. 14 1/4 பவுன் நகைகள் காணாமல் போய் இருந்தது. நான் உடனே திருடு போனது சம்மந்தமாக திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். சுமார் 7 மாதங்கள் கழித்து சிவகாசி காவல் நிலையத்தில் வைத்து எனது வீட்டில் நகை திருடிய செல்வியையும் நகையையும் நான் பார்த்தேன். எனது நகைகளை நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் அ.சா.ஆ. 1 ஆகும். எதிரிகள் தங்கராஜ் மற்றும் செல்வராஜை தெரியாது. புகைப்படத்தில் காண்பிக்கப்படும் நகைகள் காணாமல் போன எனது நகைகள் ஆகும். அந்த நகைகளை நீதிமன்றத்தில் இருந்து திரும்ப பெற்றுக் கொண்டேன். மேற்படி புகைப்படம் சா.பொ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி**. இல்லை